
தாய்மொழி - தமிழ்

# கட்டுரை வரைதலும் சுருக்கமெழுதுதலும்



1211115

ஆரம்ப ஆசிரியர் கல்விப் பாடநெறி

| | |
|---|---|
| பாடப்பதிப்பாசிரியர்கள் | எம். எம். மன்சூர்<br>ம. செ. அலெக்சாந்தர்<br>சி. புலேந்திரன்<br>சி. குமாரசாமி<br>வே. சுப்பிரமணியம் (முல்லைமணி)<br>கே. நடேசன் |
| தளக்கோலம் | எஸ். எம. ஆர். சூதீன்<br>மகிந்த ராஜபக்ச<br>ஏ. சிவராசா |
| மேற்பார்வை | கே. ஏ. பியதிஸ்ஸ<br>ஆர். பீ. ஏ. ஜயசேகர |
| பணிப்பு | கலாநிதி எஸ். டி. லயனல் அமரகுணசேகர |

92/01/11

# கட்டுரை வரைதலும் சுருக்கமெழுதுதலும்

தொலைக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

உள்ளடக்கம் பக்கம்

0.0 அறிமுகம் ........ 3
1.0 குறிக்கோள்கள் ........ 3
2.0 முற்சோதனை ........ 3

பகுதி I

3.0 கட்டுரை என்பது என்ன? ........ 4
4.0 கட்டுரை வகைகள் ........ 6
5.0 கட்டுரை ஒன்றை எழுதுதல் ........ 8

பகுதி II

6.0 கட்டுரை எழுதும் ஆற்றலை வளர்த்தல் ........ 10

பகுதி III

7.0 கட்டுரை எழுதும் திறன்கள் ........ 13
8.0 கட்டுரை எழுதும்போது ஏற்படும் தவறுகளும் அவற்றை நீக்குவதற்கான பரிகாரங்களும் ........ 14

பகுதி. IV

9.0 சுருக்கம் என்பது என்ன? ........ 16
10.0 சுருக்கி எழுதும்போது கவனிக்க வேண்டியவை ........ 17
11.0 பொழிப்பு ........ 21
12.0 பிற்சோதனை ........ 21
13.0 ஒப்படை ........ 23
14.0 உசாத்துணை நூல்கள் ........ 23
15.0 விடைகள் ........ 23

© 1990—தேசியக் கல்வி நிறுவகம்

பதிப்பு 1:2

## 0.0 அறிமுகம்

எழுத்தாற்றல் படிப்படியாக முன்னேறும்போது கட்டுரை எழுதுதலில் கவனம் செல்லும். ஏதாவதொரு தலைப்பின் கீழ் ஒழுங்கான முறையிலும் நல்ல அமைப்பிலும் எழுதுதல் கட்டுரை என அழைக்கப்படும். அதேபோல் கருத்துக்களின் பொழிப்பினை எழுதுதல் சுருக்கம் எனப்படும். கட்டுரை எழுதும் ஆற்றலையும் சுருக்கி எழுதும் ஆற்றலையும் வளர்ப்பதால் மாணவர்களின் ஆக்கத் திறன்களை அழகுறச் செய்யலாம். அதற்கான வழிகாட்டலை இந்த மொடியூலில் காணலாம்.

## 1.0 குறிக்கோள்கள்

இந்த மொடியூலைக் கற்பதால் பின்வரும் குறிக்கோள்களை அடையலாம்.

- ★ கட்டுரை, சுருக்கம் என்பவற்றின் வடிவங்களை இனம் காணுதல்.
- ★ கட்டுரை எழுதுதல், சுருக்கம் எழுதுதல் ஆகிய ஆற்றலை வளர்த்தல்.
- ★ கட்டுரையும் சுருக்கமும் ஆகிய ஆற்றல்களை வளர்ப்பதற்காக வகுப்பறைச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்யுந் திறன்.
- ★ சிறந்த கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் இயல்பு.
- ★ கட்டுரையையும் சுருக்கத்தையும் பற்றிய முக்கியத்துவத்தை உணர்தல்.

## 2.0 முற்சோதனை

இந்த மொடியூலைக் கற்குமுன் கீழ்க்காணும் முற்சோதனைக்கு விடை எழுதி உங்கள் அறிவைப் பற்றி மதிப்பீடு செய்து கொள்வது பயன்தரும்.

கீழ்க்காணும் கூற்றுக்கள் சரியெனில் √ எனவும், பிழையெனில் × எனவும் எதிரேயுள்ள கூட்டினுள் அடையாளமிடுக.

1 கட்டுரை கருத்துக்களை வெளியிடும் ஒரு முக்கியமான முறையாகும் ☐

2 கட்டுரைகளைச் செய்யுள் நடையிலும் உரை நடையிலும் எழுதமுடியும் ☐

3 கட்டுரை ஆற்றலை ஆரம்ப வகுப்புக்களிலிருந்தே வளர்த்து வருதல் வேண்டும். ☐

4. வாசிப்பதால் கட்டுரை எழுதும் ஆற்றல் விருத்தியடையும். ☐

5. ஒரே தலைப்பில் பலர் எழுதும் கட்டுரைகள் ஒரே மாதிரி இருக்கும். ☐

6. அனுபவங்கள் விரிவடையும்போது கட்டுரையாக்கமும் சிறப்படையும் ☐

7. சொற்களைக் குறைத்த மாத்திரத்திலே அது சுருக்கமாகிவிடாது. ☐

8. ஒரு கதையைக் கூடச் சுருக்கி எழுதலாம். ☐

> உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

கட்டுரையின் வடிவத்தை இனங்காணுவதற்காக நாம் இம்மொடியூலின் முதற் பகுதியைக் கற்போம்.

## பகுதி I

### 3.0 கட்டுரை என்பது என்ன?

ஏதாவதொரு தலைப்பில் முறைப்படி ஒழுங்காக ஆக்க முறையில் எழுதுதல் கட்டுரையாகக் கருதப்படும். வெளியிடப் போதிய அளவு கருத்துக்கள், அவைகளை ஒழுங்காகவும் முறையாகவும் அமைக்கும் ஆற்றல், கருத்துக்களை வெளியிடும்போது இருக்க வேண்டிய தெளிவு, பிழையின்றிச் சுவையாக உயிரூட்டும் வகையில் வெளியிடும் இயல்பு ஆகிய பண்புகள் கட்டுரையைச் சிறப்பாக அமைப்பதற்கு உதவும்.

#### சிறப்பான கட்டுரையொன்றின் இலட்சணங்கள்

**கருத்துச்சிறப்பு**

ஒரு கட்டுரையின் மதிப்பு அநேகமாக அதில் பொதிந்துள்ள கருத்திலேயே அடங்கியுள்ளது. அதை நவீன பாணியில் சமர்ப்பிப்பது மிக முக்கியமாகும். கருத்துக்கள் பாரம்பரிய முறையிலிருந்து விடுபட்டு, தனித்தன்மை வாய்ந்த முறையில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

அவ்வாறு செய்வதால் கட்டுரையின் மதிப்பும் அதிகரிக்கும்.

**தலைப்பிற்கமையக் கருத்து வெளிப்பாடு**

கட்டுரையில் இடம்பெறும் கருத்துக்கள் தலைப்பிற்குப் பொருத்தமாய் இருக்க வேண்டியது மிகவும் முக்கியம் தலையங்கத்திற்குப் பொருத்தமற்ற கருத்துக்களைக் கட்டுரையில் இடம்பெருமற் செய்வது சிறந்த கட்டுரையாளரின் பண்பாகும். ஒரு வசனத்திலிருந்து அடுத்த வசனம் நன்கு தொடர்புபட்டு நீரோட்டம்போல் செல்லுதல் நல்லதோர் கட்டுரையிற் காணப்படவேண்டிய அம்சமாகும்.

**கருத்துத் தெளிவு**

தலைப்பினைச் சரியான முறையில் விளங்கிக் கொள்வ தால் கருத்துத் தெளிவுடன் கூடிய கட்டுரையொன்றை எழுதிவிட முடியும். தலையங்கத்தின் சகல அம்சங்களை யும் கவனத்தில் கொள்ளவேண்டியது மிக முக்கியமாகும்.

**தனித்துவம்**

ஆக்கக் கட்டுரையின் முக்கிய இல்ட்சணம் அதன் தனித் துவமாகும். பிறரின் கருத்துக்களை அப்படியே எழுதுதல் ஆக்கக் கட்டுரையில் எதிர்பார்க்கப்படுவதில்லை. எழுதுபவரின் கருத்துக்கள் அவருடைய தனிப்பட்ட அனுபவங்களுடன் கலந்து நவீனமான முறையில் வெளி யிடப்பட்டால் தனித்துவமான ஆக்கம் உருவாகும்.

**ஒழுங்குற அமைத்தல்**

கட்டுரை சிறந்த ஒழுங்கில் படிப்படியாக வளர்ந்து சிறப்பாக முடிவடைய வேண்டும். கட்டுரையை எழுதத் தொடங்க முன்பு அதில் அமைய வேண்டிய விடயங் களை நன்ருக ஒழுங்கு செய்வதால் கட்டுரையின் அமைப் புச் சிறக்கும்.

**கட்டுரையின் அளவு**

கட்டுரை அளவுக்கு அதிகமாக நீண்டோ சுருங்கியோ இருத்தல் கூடாது. இவ்வளவு சொற்கள் என வரை யறுக்கப்படாத சந்தர்ப்பத்தில் ஒரு பாடசாலை மாண வனின் கட்டுரை 300 – 350 சொற்களில் அமையலாம்.

**சமநிலை**

சொந்தக் கருத்துக்களை நடுநிலையில் நின்று வெளிப்ப டுத்தும் திறமை கட்டுரையாளருக்கு அவசியமாகும். இன, மத,குல பேதங்களை ஏற்படுத்தும் கருத்துக்களைத் தவிர்த்தல் வேண்டும். திறந்த மனத்துடன் தலைப்பினை நோக்கும் இயல்பு சிறந்த ஏழுத்தாளரின் முக்கிய இலட் சணமாகும்.

**பந்தியமைப்பு**

கட்டுரையென்பது பாரியதோர் அலகாகும், அதனைப் பல சிறிய அலகுகளாக வகுத்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட சிறிய அலகே ஒரு பந்தியாகும். ஒரு பந்தியில் ஒரு முக்கியமான கருத்து மாத்திரம் அடங்கும். அந்த முக்கிய கருத்தைச் சுற்றி எழுதப்படும் பல வசனங் களே அப்பந்தியில் இடம்பெறும். அந்தப் பிரதான கருத்துச் சில வேளைகளில் பந்தியின் ஆரம்பத்தில் அல்லது நடுப்பகுதியில் அல்லது இறுதியில் இடம் பெற லாம். சில பந்திகள் சிறியனவாயும், சில பந்திகள் பெரியனவாயும் இருக்கும். சிறப்பான பந்தியமைப்புத் தெளிவான கட்டுரையின் முக்கிய இலட்சணமாகும்.

**ஆக்கத்தன்மை**

ஆக்கத்தன்மை சிறந்த கட்டுரை ஒன்றின் இன்னுமொரு பண்பாகும். ஆக்க ரீதியான எழுத்தில் இருக்கவேண் டிய இயல்புகள் மூன்றைக் குறிப்பிடலாம்.

- உண்மைத் தன்மை – யதார்த்தம்
- உணர்ச்சிகளை உருவாக்கும் தன்மை – மெய்ப்பாடு
- முன்பு அப்படியானதொன்றைக் காணுத தன்மை – புதுமை

## 4.0 கட்டுரை வகைகள்

சிறந்த கட்டுரையின் அமைப்புப் பற்றிக் கற்ற நாம் இப்பொழுது கட்டுரையின் வகைகள் பற்றிக் கற்போம். கட்டுரைகளில் இடம்பெறும் விடயங்களைப் பொறுத்தும் அவை எழுதப்படும் விதத்துக்கு அமையவும் கட்டுரைகளைப் பல வகையாகப் பிரிக்கலாம். நான்கு வகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. வேறு வகையாகவும் கட்டுரைகளைப் பாகுபடுத்தலாம். ஒரு கட்டுரை வகைக்குரிய அம்சங்கள் பிறிதொரு கட்டுரை வகைக்கும் பொருந்தக்கூடும்.

**(அ) வரலாற்றுக் கட்டுரைகள்**

ஏதாவதொரு கதை அல்லது சம்பவத்தை மையமாகக் கொண்டு எழுதப்படுவது, வரலாற்றுக் கட்டுரை எனப் படும்.

- புராணக் கதைகள்
- கிராமியக் கதைகள்
- வாழ்க்கை வரலாறுகள்

போன்றவை இவ்வகையில் அடங்கும்.

**(ஆ) வருணனைக் கட்டுரைகள்**

ஏதாவதொரு தலைப்பில் எழுதப்படும் வருணனைகள் இக்கட்டுரை வகையில் இடம் பெறும்.

- சூரியோதயம்
- மழைநாள்
- நீர்வீழ்ச்சி
- திருமண வைபவம்

போன்ற தலைப்புக்களில் எழுதப்படும் கட்டுரைகள் வருணனைக் கட்டுரை வகையைச் சேர்ந்தவையாகும்.

**சிந்தனைக் கட்டுரை**

ஏதாவது ஒரு விடயத்தை விமர்சன ரீதியாகத் தக்க சான்றுகளுடன் ஆராய்ந்து எழுதப்படும் கட்டுரை இவ்வகையைச் சேர்ந்ததாகும்.

- கம்பன் கவிநயம்
- பல்லவர் காலப் பக்தி இலக்கியம்

போன்ற கட்டுரைகள் இப்பிரிவில் இடம்பெறும்.

**விவரணக் கட்டுரை**

ஏதாவதொரு விடயத்தை விபரித்துக் கூறுதல் விவரணக் கட்டுரை வகையைச் சேர்ந்தது. இதனை விளக்கக் கட்டுரை என்றும் கூறலாம்.

- புயல்
- திரைப்படங்கள்
- நூல்நிலயம்
- மண் அரிப்பைத் தடுத்தல்

போன்ற தலைப்புக்களில் எழுதப்படும் கட்டுரைகள் இப்பிரிவில் அடங்கும்.

கற்பனைக் கட்டுரை

இல்லாத நிலைமைகளை இருப்பதாகப் பாவித்து எழுதுவது கற்பனைக் கட்டுரை எனப்படும். ஒரு பொருளின் செயலை மிகைப்படுத்திக் கூறுவதும் கற்பனைக் கட்டுரையின் பாற்படும். கற்பனைக் கட்டுரையின் பாற்படும். கற்பனைக் கட்டுரை சுயசரிதை வடிவிலும் எழுதப்படுவதுண்டு.

- எனக்கு இறகு முளைத்தால்
- மரணத்தை வெல்ல முடியுமென்றால்
- ஒரு பேனா பேசுகிறது.

இவை போன்ற தலைப்புக்களில் கற்பனைக் கட்டுரைகள் எழுதலாம்.

கட்டுரை எழுதுவதுபற்றி இதுவரை கற்றவற்றைக் கீழ்க்காணும் விதத்தில் செவ்வை பார்க்கலாம்.

செவ்வைபார்த்தல் 1

'அ' பிரிவிலுள்ள கருத்துக்குப் பொருத்தமான சொல்லை 'ஆ' பிரிவிலிருந்து தெரிந்தெடுத்து உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.

'அ' பிரிவு

1 தொடக்கம், நடு, முடிவு ஆகியவை பொருத்தமான முறையில் தொடர்புடையதாக இருப்பது ☐

2 ஒரு தலைப்பில் அமைவது ☐

3 ஆக்க ரீதியிலும் ஒழுங்கு முறையிலும் எழுதும் எழுத்து ☐

4 ரூபவாஹினி ☐

5 ஓர் எழுத்தாளனை இனங் காணும் ஒரு வகையாகும். ☐

6 கி. பி. 2000 இல் இலங்கை ☐

7 எழுதுபவரின் கருத்துக்கள் அவருடைய சொந்த அனுபவங்களுடனிருத்தல் ☐

8 ஒரு கட்டுரை முன்பில்லாத வடிவில் அமைதல் ☐

ஆ' பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 1 | கட்டுரை | 6 | தலைப்பிற்கேற்ற கருத்து |
| 2 | மெய்ப்பாடு | 7 | விவரணம் |
| 3 | கற்பனைக்கதை | 8 | பொழிப்பு |
| 4 | நடை (பாணி) | 9 | தனித்தன்மை |
| 5 | புதுமை | 10 | ஒழுங்கமைப்பு |

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

## 5.0 கட்டுரை ஒன்றை எழுதுதல்

கட்டுரை வகைகள் பற்றிக் கற்ற நாம் கட்டுரை எழுதும் விதத்தினை ஆராய்வோம்.

சிறந்த கட்டுரையொன்றை எழுதுவதற்கு முன் ஆயத்தம் தேவை.

**பொது ஆயத்தம்**

தேவையான அளவு விடயங்களைச் சேகரித்துக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் தொடக்கநிலையில் உள்ளோர்க்கு ஏற்படும் கஷ்டம் என்ன என்பதை அறிவோம். அவதானிப்பினாலும் வாசிப்பினாலும் இக்கஷ்டங்களை நீக்கிக் கொள்ளலாம்.

'வாசிப்பு ஒருவனைப் பூரண மனிதனாக்குகின்றது' என்பது பேகனின் கருத்து. உற்றுநோக்குதலும் விடய ஞானத்தைப் பெற்றுக் கொள்ளும் இன்னொரு வழியாகும். புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்தித் தாள்கள் மூலமாக எல்லாவித அறிவையும் பெறமுடியாது. ஆய்வு நோக்குடன் சுற்றாடலை அவதானித்தலும் அவசியமானது. உற்று நோக்குதலாலும் வெகுசன தொடர்புச் சாதனங்களாலும் பெற்றுக் கொண்ட அறிவைக் கலந்துரையாடல் மூலம் மேலும் தெளிவு பெறச் செய்யலாம்.

மேலே கூறியவற்றின் சாராம்சம் பின்வருமாறு;

- எழுதுபவன் எப்போதும் தொடர்பு சாதனங்களின் உச்சப் பயனைப் பெறுவான்.
- எழுதுபவன் என்றும் நன்கு அவதானிப்பான்.
- எழுதுபவன் என்றும் சிறந்த கருத்துக்களைக் கிரகித்துக் கொள்வான்.

**சிறப்பு ஆயத்தம்**

தரப்பட்ட தலைப்பின் கீழ் கட்டுரை எழுதுவதற்குச் சிறப்பாக ஆயத்தம் செய்தல் அவசியம். பின்வரும் அம்சங்கள் பற்றிக் கூடிய கவனம் செலுத்தல் வேண்டும்.

(அ) தலைப்பினைப் புரிந்து கொள்ளல்

கட்டுரை எழுதத் தொடங்கு முன்பே கட்டுரைத் தலைப்பினைத் தெளிவாகப் புரிந்து கொள்ளல் அவசியம். தலையங்கத்தின் எல்லா அம்சங்களையும் அவதானிப்பது மிக முக்கியமாகும்.

'உல்லாசப் பயணத்துறையும் எமது கலாச்சாரமும்' என்ற தலையங்கத்தில் ஒரு கட்டுரை எழுதும்போது உலலாசப் பயணத்துறையைப் பற்றி விரிவாகக்கூறி அது எங்கள் கலாசாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் விபரிக்க வேண்டியதாக இருக்கும்.

(ஆ) தகவல் தேட்டம்

தலையங்கத்தைச் சரியாகப் புரிந்து கொண்ட பின்பு தகவல்களைச் சேகரித்தல் அவசியம். உங்களிடம் போதிய அளவு தகவல்கள் இருக்க வேண்டும். அதற்குப் பலவிதமான சாதனங்களை உபயோகித்துத் தகவல் தேட வேண்டி ஏற்படும்.

(இ) தகவல்களைத் தெரிவு செய்தல்

நீங்கள் சேகரித்த எல்லாத் தகவல்களும் கட்டுரைக்குத்தேவைப்படாமலிருக்கலாம். ஆகையால் தேவையான தகவல்களை மாத்திரம் உரிய முறையில் தெரிவு செய்தல் மிகவும் முக்கியம்.

(ஈ) தகவல்களை ஒழுங்குபடுத்தல்

நீங்கள் தெரிவு செய்த தகவல்கள் கட்டுரையில் இடம் பெறும் விதத்தைப் பற்றிக் கவனித்தல் அவசியம். தொடக்கம், நடு, முடிவு ஆகியவையுடன் நன்கு இணையும் விதத்தில் தகவல்களை ஒழுங்குபடுத்தி எழுதுவது மிகவும் முக்கியம். இன்றேல் உங்கள் கட்டுரை தெளிவற்றதாய் அமைய இடமுண்டு.

**எழுதுதல்**

நீங்கள் தெரிவு செய்த முக்கியமான தகவல்களின் உதவியுடன் பந்தி பந்தியாகப்பிரித்து எழுதல் வேண்டும். சிறப்பாக இணைக்கப்பட்ட பல பந்திகள் மூலம் சிறந்த கட்டுரையை ஆக்கலாம். பந்திகளை அமைக்கும்போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள்

- ஒருமைப்பாடு
- ஒழுங்கமைப்பு
- கவன ஈர்ப்பு
- கட்டுரையின் அளவு

**ஒருமைப்பாடு**

ஒரு பந்தியில் ஒரு முக்கிய கருத்து மாத்திரம் இடம் பெற வேண்டும். முக்கியமான கருத்து பந்தியின் தொடக்கத்தில் அல்லது நடுவில் அல்லது முடிவில் பெறலாம். எனினும் எல்லா வாக்கியங்களும் கூறப்பட்டுள்ள முக்கிய கருத்துடன் இணைய வேண்டும். இன்றேல் பந்தியின் ஒருமைப்பாடு சிதைந்துவிடும்.

ஒரு பந்தியில் ஒரு கருத்து

**ஒழுங்கமைப்பு**

பந்தியின் வாக்கியங்களுக்கிடையே தர்க்க ரீதியான தொடர்பு இருத்தல் வேண்டும். சிறந்த பந்தியொன்றில் இரு வாக்கியங்களை மாற்ற முடியாமல் இருக்கும். அதே போல் ஒரு வாக்கியத்தையாவது அகற்றுவது கடினமாக இருக்கும்.

**கவன ஈர்ப்பு**

பந்திகள் முக்கிய கருத்திற்கு அமைய எழுதப்படுவதால் அவற்றின் உயிரோட்டம் அதிகரிக்கும். பந்தியின் முதல் வாக்கியத்தின் மூலமே எழுத்தாளன் வாசகனின் கவனத்தை ஈர்த்துவிட வேண்டும்.

**கட்டுரையின் அளவு**

ஒரு பந்தியின் அளவினை வரையறுக்க முடியாது. சில பந்திகள் சிறியனவாயும் சில பெரியனவாயும் அமையும் இத்தனை பந்திகள் அமைய வேண்டும் என்றோ இத்தனை சொற்கள் இடம் பெறவேண்டும் என்றோ திட்டவட்ட

மாகக் கூறமுடியாது. மாணவர்களின் வயதுக்கும் ஆற்ற லுச்கும் ஏற்ப அவை வேறுபடும்.

நீங்கள் இதுவரையும் கற்ற விடயங்களை உறுதிப் படுத்திக் கொள்வதற்குப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுக.

**செயற்பாடு 1**

அ. ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கேற்ற பின்வரும் வகைகளைச் சேர்ந்த கட்டுரைத் தலைப்புக்கள் ஐந்தினை எழுதுக.

வர்ணனைக் கட்டுரை

கற்பனைக் கட்டுரை

ஆ. எட்டாம் ஆண்டு மாணவர்களுக்குப் பொருத்த மான பின்வரும் கட்டுரை வகைகள் ஒவ்வொன் றிற்கும் இரு கட்டுரைத் தலைப்புக்கள் எழுதுக.

வரலாற்றுக் கட்டுரை

வருணனைக் கட்டுரை

விவரணக் கட்டுரை

சிந்தனைக் கட்டுரை

கற்பனைக் கட்டுரை

கட்டுரை எழுதும் ஆற்றலை வளர்ப்பது பற்றித் தெளி வாகப் பகுதி இரண்டில் அறிந்து கொள்வோம்.

பகுதி. II

## 6.0 கட்டுரை எழுதும் ஆற்றலைவளர்த்தல்

கட்டுரை எழுதும் ஆற்றலை வளர்த்தல் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வது ஆரம்ப பாடசாலை ஆசிரியரைப் போலவே இடை நிலைப் பாடசாலை ஆசிரியருக்கும் மிகவும் முக்கியமாகும்.

**ஆரம்ப பருவம்**

ஆரம்ப பருவ ஆண்டுகளிலுள்ள மாணவர்களினது கட்டுரை எழுதும் ஆற்றலை வளர்ப்பது எப்படி என்பதை ஆராய்வோம். அதற்காக ஆரம்ப பாடசாலை ஆசிரியர் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளைக் கீழே தருகிறோம்.

- இரண்டு மூன்று சொற்களடங்கிய தனி வாக்கி யங்கள் எழுதுதல்
- சில வாக்கியங்களை எழுதுதல்
- செய்திகளைப் பதிவு செய்தல்

- கதைகளை எழுதுதல்
- அனுபவங்களை எழுதுதல்
- குறிப்பிட்ட சம்பவம் ஒன்றை விபரித்தல்
- சுவர்ச் செய்தித் தாள்கள் அமைத்தல்
- நாட்குறிப்பேடுகள் எழுதுதல்
- கட்டுரை வங்கி பேணல்

**இரண்டு மூன்று சொற்களடங்கிய தனி வாக்கியங்கள்**

இவற்றைப் படமொன்றுடன் தொடர்புபடுத்திச் சிறப்பாக அமைக்கலாம். இவ்வகையான அப்பியாசங்கள் கட்டுரை எழுதுதலில், ஆரம்பப் பருவத்திற்குப் பொருத்தமானவை.

**சில வாக்கியங்களை எழுதுதல்**

தலையங்கங்களை வைத்து வாக்கியங்கள் எழுதுதல்

அம்மா

எனது செல்லப் பிராணி

எனது கிராமம்

இவை போன்ற தலையங்களின் கீழ் வாக்கியங்கள் அமைக்கச் செய்வது நன்று.

**சம்பவங்களைப் பதிவு செய்தல்**

அன்றாட வாழ்க்கையில் இடம்பெறும் சம்பவங்களைப் பதிவு செய்தல். ஆரம்ப ஆண்டுகளிலுள்ள மாணவர்களுக்கு மிகப் பொருத்தமான அப்பியாசமாகும். அவர்கள் கண்ட அல்லது கேட்ட சம்பவங்களைப் பதிவு செய்யலாம்.

பாடசாலை விளையாட்டு விழா

வீதி விபத்து

போன்ற தலைப்புக்களை இதற்காகப் பயன்படுத்தலாம்.

**கதைகளை எழுதுதல்**

ஏற்கனவே தெரிந்த கதைகளை எழுதுதலும், புதிய கதைகளை உருவாக்கி எழுதுதலும் பிள்ளைகளின் எழுத்தாற்றலை வளர்க்க உதவும். குறுகிய குறிப்புக்களைக் கொடுத்துக் கதையொன்றை அமைக்க விடலாம். கீழ்வரும் குறிப்புக்களை வாசியுங்கள்.

- நரியொன்று கிணற்றுக்குள் விழுதல் – கரையேற முடியாமலிருத்தல் – கிணற்றினுள் பாய்வதற்கு ஆடொன்றை ஊக்குவித்தல் – ஆட்டின் முதுகில் ஏறிக் கரையை அடைதல் – ஆடு கிணற்றுள் தவித்தல்.

- விவசாயியின் மகள் பாற்குடம் சுமந்து செல்லல்- பால் விற்றுப் பெறும் பணத்தால் வாங்கக்கூடிய பொருள்கள் பற்றிச் சிந்தித்தல் – செல்வச் சீமாட்டியாக வர மனத்தில் கற்பனை பண்ணல்– திருமண ஆலோசனைகளை நிராகரித்தல் – கர்வத்தோடு தலையசைத்தல்

இவை போன்ற குறிப்புக்களை அடிப்படையாக வைத்துக் கதைகளை ஆக்கத் தூண்டலாம்.

**அனுபவங்களைப் பதிவு செய்தல்** 'பட்டமொன்றைத் தயாரிப்பது இப்படியே' இது போன்ற தலைப்புக்களில் எழுதச் செய்யலாம்.

**சுவர்ச் செய்தித் தாள்** சுவர்ச் செய்தித் தாள்களைத் தயாரிப்பது மிகப் பயன் தரக்கூடிய அப்பியாசம் ஆகும். மேல் ஆரம்ப வகுப்பு (நான்காம் ஐந்தாம் ஆண்டு) மாணவர்களுக்கான சுவர்ச் செய்தித் தாள்கள் மூலம் மாணவர்களின் ஆக்கங்களை ஏனைய பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல ஆசிரியர்களுக்குக் கூட வாசிக்கும் சந்தர்ப்பம் ஏற்படும். இதன் மூலம் மாணவர்களைக் கட்டுரை எழுத ஊக்குவிக்கலாம்.

**நாட்குறிப்பு** நாட்குறிப்புக்களை எழுத மாணவர்களை ஊக்குவிக்கலாம்.

**கட்டுரை வங்கி** மாணவர்களின் சிறந்த கட்டுரைகளைச் சேகரித்துக் கட்டுரை வங்கியொன்றை நிறுவுதல் பயன்தரும். அவற்றை ஏனைய மாணவரின் உபயோகத்திற்குப் பயன்படுத்தலாம்.

**இடைநிலைப்பருவம்** இடைநிலைப் பருவத்தில் உபயோகிக்கக்கூடிய சில செயற்பாடுகளைக் கீழே தருகின்றோம்.

- நாட்குறிப்புக்கள்
- சுவர்ச் செய்தித்தாள்கள்
- வகுப்புச் சஞ்சிகைகள்
- பாடசாலைச் சஞ்சிகைகள்
- நாடகப் பிரதி
- உரையாடல்களை எழுதுதல்
- பந்தியொன்றை எழுதுதல்
- குறிப்புக்களின் உதவியுடன் கட்டுரை எழுதுதல்

நாட்குறிப்பு எழுதுதலையும் சுவர்ச் செய்தித்தாள்களை ஆக்குதலையும் ஆரம்பப் பருவத்திலிருந்தே செயற்படுத்தலாம் என நாம் அறிவோம். அவற்றை மிகச் சிறப்பான முறையில் இடைநிலைப் பருவத்தில் செயற்படுத்த வேண்டும்.

வகுப்புச் சஞ்சிகைகளும் பாடசாலைச் சஞ்சிகைகளும் தயாரிப்பது இடைநிலைப் பருவத்தில் மிகச் சிறந்த பயிற்சியாகும். மாணவர்களின் ஆக்கங்களை ஏனையோர் பார்ப்பதற்கும் வாசிப்பதற்கும் சந்தர்ப்பம் அளிப்பதால் மாணவர்களுக்கு ஊக்கமளிக்க முடியும்.

சிறு நாடகங்களை ஆக்கவும் இடைநிலைப் பருவத்தில் சந்தர்ப்பங்களை அளிக்கலாம். உரையாடல்களை எழுதச் செய்வதும் பொருத்தமான பயிற்சியாகும்.

'ஒரு பொலிஸ் உத்தியோகத்தருக்கும் மாணவன் ஒருவனுக்குமிடையே நடைபெறும் உரையாடல்' போன்ற உரையாடல்களை எழுதச் செய்யலாம்.

**பந்தி எழுதுதல்**

பந்தி எழுதுவதற்கு இடைநிலைப் பருவத்தில் கூடுதலான பயிற்சியளித்தல் வேண்டும். சிறந்த பந்தியொன்றின் பண்புகளைக் காட்டும் விதத்தில் விதம் விதமான தலைப்புக்களில் பந்திகளை எழுதச் செய்யலாம்.

1. ஆரம்ப காலத்தில் காட்டின் பாதுகாப்பைப் பெற்று வாழ்ந்த மனிதன் தற்போது காடுகளை அழிப்பதில் ஈடுபடுகிறான்.
2. பட்டம் விடும் பிள்ளைகள்
3. பாடசாலை நாட்களில் நான் சென்ற கல்விச் சுற்றுலா இன்றும் என் மனத்திலுள்ளது.
4. நூல்களும் செய்தித்தாள்களும் எமது நண்பர்கள்.

கட்டுரை எழுதுதலில் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆற்றலகளை விமர்சனக் கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கும், கட்டுரை எழுதும்போது ஏற்படும் பிழைகளை அறிவதற்கும் மூன்றும் பகுதியைக் கற்போம்.

பகுதி. III

## 7.0 கட்டுரை எழுதும் திறன்கள்

கட்டுரை எழுதும் திறன்களை இரு முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம்.

- பொறிமுறைத் திறன்களிற் பழக்கம்
- ஆக்கத் திறன்

**பொறிமுறைத் திறன்கள்**

எழுத்துருவின் செம்மை

எழுத்துப் பிழையின்றி எழுதுதல்

குறியீடுகளை உபயோகித்தல்

எழுத்து வேகம்

சொற்களைப் பிரித்து எழுதுதல் – எழுத்து இடைவெளி;
சொல்லிடை வெளி

தற்கால வழக்கிற்கேற்ப எழுதுதல்

இவ்விடயங்கள் பற்றிய மேலதிக விபரங்களை 121108 121112, 121113, 121114 ஆம் இலக்க மொடியூல் களில் கற்றுள்ளீர்கள்.

அவற்றை மீண்டும் படியுங்கள்.

**ஆக்கத்திறன்கள்**

ஆக்கமுறையிலான எழுத்தில் முக்கியமான மூன்று பண்புகள் காணப்படும் என முன்பு குறிப்பிட்டோம். அவற்றைக் கவனத்திற் கொள்ளவும்

(அ) உண்மைத்தன்மை (யதார்த்தம்)

ஓர் ஆக்கத்தின்போது இடம்பெறும் கருத்துக்களின் உண்மைப் பண்பினையே யதார்த்தம் அல்லது உண்மைத் தன்மை என்கிறோம். மாணவர்களின் ஆக்கமுறையிலான எழுத்துக்கள் அவர்களுடைய சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும். எழுதுபவரின் தனித் தன்மையை அது காட்டவேண்டும்.

(ஆ) மெய்ப்பாடு (உணர்ச்சியை ஏற்படுத்தும் தன்மை)

மெய்ப்பாடு என்பது உணர்ச்சிகளை ஏற்படுத்தும் தன்மையைக் குறிக்கிறது. ஏதாவதொரு ஆக்கத்தின் மூலம் ரசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனின் அவ்வாக்கம் வாசகரிடம் மெய்ப்பாட்டினை ஏற்படுத்த வேண்டும்.

(இ) புதுமை

புதுமை என்பது முன்பு கண்டு கேட்டு அறியாதது என்பதே. எழுதுபவரின் சொந்த ஆக்கம் என்பதே இதன் பொருளாகும். இவற்றில் எழுதுபவரின் ஆக்கத்திறன் மிக முக்கிய இடத்தைப் பெறும்.

கட்டுரை எழுதும்போது காணப்படும் முக்கிய தவறுகளையும் அவற்றை நீக்குவதற்கான பரிகாரங்களையும் பற்றி இனி நாம் கற்போம்.

## 8.0 கட்டுரை எழுதும்போது ஏற்படும் தவறுகளும் அவற்றை நீக்குவதற்கான பரிகாரங்களும்

### (அ) பொருட் சிறப்பின்மை

பாடசாலையில் பிள்ளைகளின் கட்டுரைகளிற் காணப்படும் மிக முக்கிய குறைபாடு பொருட் சிறப்பின்மையாகும். புத்தகங்கள், செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவை மூலமாகத் தேவையான தகவல்களைப்பெற ஊக்குவிப்பதன் மூலமும் அவதானிப்பதற்குச் சந்தர்ப்பம் அளிப்பதன் மூலமும் இக்குறைபாட்டை நீக்கலாம்.

### (ஆ) ஒழுங்கின்றி எழுதுதல்

இது போன்ற பிழைகளுக்கு முக்கிய காரணம் பந்தி யமைப்புப் பற்றிய உணர்வின்மையேயாகும். இக்குறை பாட்டை நீக்குவதற்குப் பந்தியெழுதும் பயிற்சிகள் அடிக்கடி கொடுத்தல் வேண்டும்.

### (இ) பொருத்தமற்ற சொல்லுபயோகம்

சரியான கருத்தை அறியாது சொற்களே உபயோகித் தல் சொற்பிழை ஏற்படுவதற்குக் காரணமாகும். சொற்களஞ்சியத்தை அபிவிருத்தி செய்யும் அப்பியா சங்கள் அடிக்கடி கொடுத்தல் பொருத்தமான சொற் களே உபயோகிப்பதற்கு வாய்ப்பளிக்கும்.

### (ஈ) பொருத்தமற்ற அல்லது தவருன கருத்துக் கள் இடம் பெறல்

பிள்ளேகள் சில வேளேகளில் கட்டுரைத் தலேப்பிற்குப் பொருத்தமற்ற அல்லது தவருன கருத்துக்களேத் தங் கள் கட்டுரையில் எழுதிவிடுகிருர்கள். உதாரணமாக ''இலங்கை உலகத்திலே போக்குவரத்து வாகனங்கள் கூடிய நாடாகும்'' இக்கூற்று பிழையானதாகும். இதற்கு வாசிப்புக்குறைபாடே காரணமாகும். இதனே நீக்குவதற்கு நூல்நிலேயத்தைப் பயன்படுத்தத் தூண்ட வேண்டும்.

### (உ) எழுத்துப் பிழைகள்

இக்கால மாணவர்கள் எழுதும் கட்டுரைகளில் எழுத் துப் பிழைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. வாசிப் புக் குறைபாடும் உச்சரிப்புக் குறைபாடுமே எழுத்துப் பிழை ஏற்படுவதற்கு முக்கிய ஏதுக்களாம். அடிக்கடி எழுதும் சொற்களின் சரியான அமைப்பை வகுப்பறை யில் காட்சிக்கு வைப்பதால் இந்தப் பிழையை ஓரளவு நீக்கலாம்.

### (ஊ) இலக்கணப் பிழைகள்

எழுவாய், பயனிலே தொடர்பான விதிகளேக் கவனிக் காமல் எழுதுவதை அநேகமாகக் காணக் கூடியதாக இருக்கிறது. வாசிப்புப் பயிற்சியாலும் அடிக்கடி அப்பியாசங்கள் செய்விப்பதாலும் இவ்வகையான பிழைகளே அகற்றலாம்.

இப்பகுதியின் மூலம் நீங்கள் கற்றவற்றை உறுதிப் படுத்தப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.

செயற்பாடு. 3 உண்மைத்தன்மை

மெய்ப்பாடு

புதுமை

போன்ற விடயங்களின் கீழ்' தொடர்பு சாதனங்கள் மூலம் உதாரணங்கள் சேகரிக்கவும்.

கட்டுரை எழுதுதல் பற்றிக் கற்ற நாம் சுருக்கம் என்ருல் என்ன என அறிவதற்கு நாலாம் பகுதியைக் கற்போம்.

## பகுதி IV

### 9.0 சுருக்கம் என்பது என்ன?

குறிப்பிட்ட ஒரு உரைப் பகுதியின் முக்கிய அம்சங்களைச் சுருக்கித் தருதலே சுருக்கம் எனப்படும். கருத்துக்களை விரித்து எழுதுதலும் சுருக்கி எழுதுதலும் மிகவும் முக்கியமானவை. குறிப்பிட்ட பகுதியின் சாரத்தை மாத்திரம் எடுத்துக் காட்டுவது துரிதமாக இயங்கும் இக்கால சமுதாயத்திற்கு மிகவும் பயனளிக்கும். நீண்டதோர் உரைப் பகுதியை முற்றுக வாசிக்க வேண்டிய தேவையைக் குறைத்துக் கொள்வதற்கும் விடயங்களை ஒழுங்கான முறையில் குறித்துக் கொள்வதற்கும் சுருக்கம் எழுதும் திறன் உதவியாக இருக்கும்.

நீண்ட விரிவுரைகள், கட்டுரைகள் ஆகியவற்றில் இருந்து தேவைப்படும் விடயங்களைச் சுருக்கமாகக் குறித்து வைப்பதற்கும் சுருக்கமெழுதும் ஆற்றல் பயன்படும். தொடர்பு சாதனங்கள் மூலம் நாங்கள் பெற்றுக்கொள்ளும் செய்திகளை வேறெருவருக்குச் சுருக்கமாகக் கூறவேண்டியதாக இருக்கும். முக்கியமற்ற பகுதிகளை அகற்றிவிட்டு மிக முக்கியமான கருத்துக்களைக் கிரகிப்பது நுண்மதியின் ஓர் இலட்சணமாகும். சுருக்கி எழுதும் ஆற்றல் ஆசிரியருக்கு மிகவும் அவசியமானது.

**சிறந்த சுருக்கத்தில் இருக்க வேண்டிய பண்புகள் பின்வருமாறு**

**முக்கிய கருத்து அடங்கியிருப்பது**

குறிப்பிட்ட உரைப் பகுதியின் முக்கிய கருத்துச் சுருக்கத்திலே தெளிவாக இருத்தல் வேண்டும். முன்னர் முழுப் பகுதியையும் வாசிக்காதவர்கூட அதில் அடங்கிய முக்கிய கருத்தை நன்ருக விளங்கிக் கொள்ளும் விதத்தில் சுருக்கம் அமைவது அவசியம்.

### சுருக்கமாக இருத்தல்

சுருக்கம் என்பது அளவில் குறுகியதாக இருக்கும். விசேட ஆலோசனை வழங்கப்படாதவிடத்து முழுப் பகுதியின் மூன்றிலொரு பங்காகச் சுருக்குவது வழக்கமாகும்.

உவமானங்கள், உதாரணங்கள், அலங்காரங்கள், மேற்கோள்கள், அடைமொழிகள் ஆகியவை சுருக்கும்போது தவிர்க்கப்படல் வேண்டும்.

### கருத்துக்களை ஒழுங்கு செய்தல்

உரைப் பகுதியின் கருத்தினை நன்ருக விளங்கிக் கருத்துக்களை ஒழுங்குற எழுதுதல் சிறந்த சுருக்கமொன்றின் பண்பாகும். சுருக்கமெழுதும்போது ஒவ்வோர் வசனங்களுக்குமிடையே கருத்துத் தொடர்பு இருத்தல் வேண்டும்.

### இலகுவாக விளங்கக் கூடியதாக இருத்தல்

சிறந்ததோர் சுருக்கம் இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கும். சிக்கலான கருத்துக்கள் தவிர்க்கப்படல் வேண்டும். உரைப் பகுதியில் வரும் கருத்துக்களைப் பொருத்தமான விதத்தில் சுருக்கியமைக்கும் சுதந்திரம் சுருக்கி எழுதுபவருக்கு உண்டு.

சுருக்கம் என்ருல் என்ன என்பதை அறிந்து கொணட நாம் சுருக்கி எழுதும்போது பின்பற்ற வேண்டியவற்றை ஆராய்வோம்.

## 10.0 சுருக்கி எழுதும்போது கவனிக்க வேண்டியவை

தரப்பட்ட பகுதியை மிகக் கவனமாக வாசியுங்கள். அப்பகுதியின் முக்கிய கருத்து என்ன என்பதை முதல் வாசிப்பின்போதே விளங்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள். உவமானங்கள், உதாரணங்கள், மேற்கோள்கள், அலங்காரங்கள் ஆகியவற்றைச் சுருக்கியெழுதும் போது தவிர்த்து விடுங்கள். முக்கியமென நீங்கள் கருதும் கருத்துக்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். அவற்றை உங்கள் மொழிநடையில் எழுதுவீர்களாயின் சுருக்கம் சிறந்ததாக அமையும்.

தன்கூற்று வாக்கியங்களைப் பிறர்கூற்று வாக்கியங்களாக மாற்றி எழுதுங்கள்.

தரப்பட்ட உரைப்பகுதியில் பல பந்திகள் இருப்பினும் சுருக்கத்தை ஒரே பந்தியில் எழுதுங்கள். பெரும்பாலோர் சுருக்கத்திற்குப் பொருத்தமான தலைப்பினையும் இடுவர்.

பின்வரும் உரைப்பகுதியைச் சுருக்கி எழுதியுள்ள விதத்தைப் பார்ப்போம்.

''இறைவனின் பேரருளைப் பெறுவதற்கு இசைப்பாடல்கள் உறுதுணையாக அமையும். இலங்கை வேந்தனை இராவணன் இசைபாடி இறைவன் அருளைப் பெற்றான். இசைக்குப் பகுத்தறிவற்ற விலங்குகளும் அடங்கி ஏவல் கேட்கும். சீவகன் இசையின் திறத்தால் மதங் கொண்ட யானையை அடக்கித் தன்வசமாக்கினான்.''

இவ்வுரைப் பகுதியின் சுருக்கமான கருத்து : **இறைவனருளைப் பெறுவதற்கும் விலங்குகளை அடக்கியாள்வதற்கும் இசை பயன்படும்.**

மூலப்பகுதியில் இடம் பெற்ற இராவணன் இசைபாடியமை சீவகன் இசைபாடி மதயானையை அடக்கியமை என்னும் இரு உதாரணங்களும் தவிர்க்கப்பட்டுள்ளன.

நீங்கள் கற்ற விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்குப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.

**செயற்பாடு 4** கீழ்க்காணும் உரைப்பகுதிகளைச் சுருக்கி எழுதுங்கள்.

(அ) போர்த்துக்கேயர் காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள காணி பூமி, அவற்றிலுள்ள மரங்கள், பயிர்கள் முதலியனவும், குடிகளின் தொகையும் அவர்களில் ஆண், பெண் எத்தனை என்பதும் ஒவ்வொருவரும் பிறந்த ஆண்டு நாள் ஆகியனவும் அரசினரால் பதிவு செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. இவைகளைத் 'தோம்பு' என்று தமது போர்த்துகேய மொழியிற் கூறுவர். இத்தோம்புகளை ஒல்லாந்தரும் எடுத்தாண்டனர். மூன்றாண்டுகளுக்கொருமுறை இவைகளைப் புதுப்பித்தார்கள். இத்தோம்பு மூலமாகவே தலைவரிப் பணம் முதலியவைகளைக் குடிகளிடமிருந்து அறவிட்டனர். யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு சாதியாரும் மொத்தமாக இவ்வளவு பணம் கொடுக்கவேண்டும் என்று கட்டளை வைத்துத் தலைவரிப் பணத்தை முதன் முதலில் வாங்கி வந்தனர். சனத்தொகை பெருத்தபோதும் தலைவரிப் பணத் தொகை பெருத்த போதும் தலைவரிப் பணத் தொகை பெருகவில்லை. ஏனெனில் ஒவ்வொரு சாதியாரிடமிருந்தும் பணத்தை மொத்தமாக வாங்குகிற வழக்கம் இருந்தபடியால் அரசினருக்கு ஒவ்வொ சாதியாரிலும் தலைவரிப் பணம் இருக்குகிறவர்கள் எத்தனை ஆட்களென்று தெரிந்து கொள்ள முடியவில்லை. அக்காரணத்தால் சாதிகளிடமிருந்து மொத்தத் தொகையாக வாங்குவதை நிறுத்திவிட்டு ஒவ்வொரு ஆட்களிடமிருந்தும் தலைவரிப்பணம் வாங்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தார்கள்.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

(ஆ) வடக்கு, கிழக்கு, தென் பகுதிகளில் வன்செயல் அசம்பாவிதங்களினுல் பாதிக்கப்பட்டு இப்போது அகதிகளாக உள்ள அனைவருக்கும் குடும்பமொன்றுக்குப் பத்தாயிரம் ரூபா புனர்வாழ்வு உதவி அளிக்கவிருப்பதாக நிதிதிட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் அறிவித்திருக்கிருர். தமிழகத்திலிருந்து திரும்பும் அகதிகளுக்கும் இந்த உதவி கிடைக்குமென்று அமைச்சர் குறிப்பிட்டிருக்கிருர். இலங்கையிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதுவர்களுடன் நடத்திய கலந்துரையாடலைத் தொடர்ந்தே அமைச்சர் அரசின் புனர்வாழ்வுத் திட்டத்தை அறிவித்துள்ளார்.

பழைய இடங்களை விட்டுச் சென்றவர்கள் மீண்டும் தமது இருப்பிடங்களில் வந்து உடனடியாக வாழ்க்கையை ஆரம்பிப்பதென்பது இயலாத காரியமாகும். சில பகுதிகளில் வீடுகள் தரைமட்டமாகியுள்ளன. வேறு சில இடங்களில் அரைகுறையாக இடிபாடுகளுடன் வீடுகள் காணப்படுகின்றன. வர்த்தக நிலையங்களின் நிலையும் அதுவே.

புனர்வாழ்வு உதவிகோரி இதுவரை ஆயிரத்தைந்நூறு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. புனரமைப்பு நடவடிக்கைகளை இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிக்க நிதியமைச்சர் திட்டமிட்டுள்ளார். உலகவங்கி, சர்வதேச நாணய சபையின் அதிகாரிகள் குழுவொன்று விரைவில் இலங்கைக்கு வரவிருக்கின்றது.

அரசின் இந்தப் புனர்வாழ்வு உதவி 'ஆனைப் பசிக்குச் சோளப் பொரி' கொடுப்பதைப் போன்றதே. சேதமுள்ள பகுதிகளைப் புனரமைப்பதெனில் ஆயிரக்கணக்கான கோடி ரூபா பணம் தேவைப்படும். சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு இருந்தாலேயே புனரமைப்பு வேலைகளைச் சீராக்ச் செய்யமுடியும். இல்லையேல் 'ஆண்டிகள் கூடி மடங்கட்டிய' கதையாய் விடும்.

எனவே சர்வதேச நாடுகள் இலங்கைக்குப் புனரமைப்புக்காக அளிக்கும் உதவிகள் அதிகரிக்கப்படவேண்டும். அதேவேளை பாதிப்புற்றோருக்கு அரசின் புனர்வாழ்வு உதவியும் அதிகரிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

*வீரகேசரி – 27 . 08 . 1987*

(இ) இந்நிலையிலே, தென்னுடு செய்த அருந்தவத்தினுலும், தமிழன்னை பன்னெடுங்காலமாகத் திரட்டி வைத்துள்ள அரும் புண்ணியத்தின் பெரும் பயனுலும் கம்பர் பெருமான் தோன்றியருளினர். இப்பெரியாரது ஜனனத்தைத் தெய்வத் தோற்றம்

என்று தான் கூறியமைதல் வேண்டும். பிரகிருதி தேவி தனது அருள்வளம் அனைத்தையும் இவர்பால் வரையாது பொழிந்தனள். 'கருவிலே திருவுடையர் என்பதற்கு இவரிடத்தன்றி ஏனையோர் பால் பொருள் நிரம்பக் காணுதலரிது. இயற்கையிலேயே பேரறிவு படைத்தவர். 'தொட்டனைத்தூறு மணற் கேணி மாந்தர்க்குக், கற்றனைத்தூறு மறிவு' என்பது பொய்யா மொழியாகலின், தம்காலத்து வழங்கிய அருங்கலைகள் அனைத்தையும் முற்றக் கற்றுத் தமது அறிவினது அளவினையும் ஆற்றலை யும் முன்பின் ஒப்பின்றிப் பெருக்கிக் கொண்டனர்.

தமது தாய் மொழியை முற்றக் கற்றதனோடு அமை யாது வடமொழிப் பயிற்சியும் நிரம்ப வாய்ந்து விளங்கினர். தம்மோடு ஒப்பாரும் மிக்காருமில்லாத பெருங் கல்வியாளராய்ப் புலமை முற்றிய காரணத் தாலே 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்னும் முதுமொழி காலதேச வர்த்தமானத்தால் அளவு படாத ஒரு பொதுவுண்மையாய்த் தமிழுலகில் வழங்கியது. உணர்ச்சி, வலி முதலிய பிற மன நலங்களும் இவர்பால் நிரம்பியிருந்தன. மக்களது உள்ளமாகிய வீணையில் எத்தனை வகையான உணர்ச்சி பேதங்கள் எழக்கூடுமோ அவையனைத் தும் தமது சங்கற்ப மாத்திரையினலே எழுந்து இனிது சப்திக்கச் செய்யும் பேரிசையாண்மை பெற்று விளங்கினர் அவர்.

– எஸ். வையாபுரிப்பிள்ளை

தமிழ்ச் சுடர்மணிகள் பக். 154

சுருக்கியெழுதுதல் பற்றி நீங்கள் கற்றவற்றை உறுதிப் படுத்திக் கொள்ளக் கீழ்க்காணும் விதத்தில் செவ்வை பார்த்துக் கொள்க.

**செவ்வைபார்த்தல் 2**

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் √ எனவும், பிழை யாயின் × எனவும் எதிரில் உள்ள கூட்டினுள் அடை யாளம் இடுக.

1. தரப்பட்டுள்ள உரைப் பகுதியின் கருத் தைக் குறுக்கி எழுதுவது சுருக்கம் எனப் படும். ☐

2. உவமானம், அலங்காரம், மேற்கோள்கள் ஆகியவற்றைச் சேர்த்து எழுதும் சுருக் கமே சிறப்பானது. ☐

3. உரைப் பகுதியை விபரமாக வாசித்து முக்கிய கருத்துக்களைக் கிரகித்துக் கொள் ளல் சுருக்கியெழுதுவதற்கு அவசியமாகும். ☐

4. தரப்பட்ட உரைப் பகுதியைமூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுதல் வழக்க மாகும். ☐

5. உரைப் பகுதியினதும் சுருக்கத்தினதும் முக்கிய கருத்து ஒன்ருகவே இருத்தல் வேண்டும். ☐

6. தரப்பட்டுள்ள உரைப் பகுதியில் இடம் பெறும் சொற்களேயும் வசன அமைப்புக் களேயும் கருத்தைப் பாதிக்காத விதத்தில் மாற்றியமைக்கலாம். ☐

7. மூலப் பகுதியிலுள்ள தன்கூற்று வாக்கி யங்கள் சுருக்கத்தில் இடம் பெறவேண்டி யதில்லே. ☐

8. சுருக்கி எழுதுதல் பற்றிய அறிவு ஆசிரிய ருக்கு வகுப்பறையில் மாத்திரமே தேவைப் படும். ☐

உங்கள் விடைகளே மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

இந்த மொடியூலில் நீங்கள் கற்றவற்றின் பொழிப்பு பின்வருமாறு:

## 11.0 பொழிப்பு

மக்களின் அன்ருட வாழ்க்கையில் கட்டுரையும் சுருக்கமும் மிகவும் உதவியான திறன்களாகும். நல்ல முறையில் கட்டுரை வரைதலுக்கும் சுருக்கியெழுது தற்கும் பலவகைப்பட்ட திறன்களேப்பெற வேண் டியது அவசியமாகும். மாணவரிடம் அவற்றை வளர்த்தல் ஆசிரியரின் கடமையாகும். பலவிதமான செயற்பாடுகளினூடாகக் கட்டுரை, சுருக்கம் என் பன எழுதும் ஆற்றலே வளர்க்கலாம். கட்டுரை, சுருக்கம் எழுதுதலில் மாணவர்கள் விடும் தவறு களேயும், குறைபாடுகளேயும், அறிந்து அவற்றிற்குத் தகுந்த பரிகாரம் தேடுவது ஆசிரியர்கள் கடனுகும்.

இந்த மொடியூலில் நீங்கள் கற்றவற்றை உறுதிப் படுத்திக்கொள்ளக் கீழே தரப்பட்டுள்ள பிற்சோதனே யில் ஈடுபடுங்கள்.

## 12.0 பிற்சோதனே

(I) தரப்பட்டுள்ள சொற்களிற் பொருத்தமான சொற்களேத் தேர்ந்தெடுத்துக் கீழேயுள்ள வசனங் களிற் கீறிட்ட இடங்களே நிரப்புக.

அனுபவங்கள், தொடர்புறுத்தல், கருத்து, சுருக் கம், மதிப்பீடு, ஆக்கத்தன்மை, பந்தி

1 கட்டுரையும் சுருக்கமும்..........................இல் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

2 சிறந்த கட்டுரையின் முக்கிய பண்பு........
..............எனக் கருதலாம்.

3 ஒரு பிரதான கருத்தைச் சுற்றி அமைக்கப் பட்ட உரைப்பகுதியை........................ என அழைக்கலாம்.

4 ஒரு கட்டுரையை..............................செய் யும்போது விடயம், ஒழுங்கு, அமைப்புப் போன்ற அம்சங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

5 கட்டுரை எழுதுப் ஆற்றலை வளர்ப்பதற்கு ................................மிகவும் பயனளிக் கும்.

6 கருக்கம் என்பது தரபட்ட பந்தியின்........
..............சுருக்கி எழுதுதலாகும்.

(II) பகுதி 'அ' வில் கூறப்படும் கருத்துக்குப் பொருத் தமான சொல்லைப் பகுதி 'ஆ' விலிருந்து தேர்ந் தெடுத்து உரிய இலக்கத்தை எதிரேயுள்ள கூட் டினுள் இடுக.

| பகுதி 'அ' | | பகுதி 'ஆ' |
|---|---|---|
| 1 தெளிவான எழுத்தும் சொல் இடைவெளியும் | ☐ | 1 ஆக்கத்திறன் |
| | ☐ | 2 வாசித்தல் |
| 2 கட்டுரையின் ஆரம்ப மும் நடுவும் இறுதியும் சிறப்பாக இணைதல் | ☐ | 3 பயிற்சியால் வரும் |
| 3 புதிய முறையில் எழுதுதல் | ☐ | 4 மொழி வழக்கு |
| 4 கட்டுரை ஆற்றலை வளர்த்தலுக்கு உதவு வது | ☐ | 5 பொருத்தமான தன்மை |
| | ☐ | 6 குறுகிய தன்மை |
| 5 கட்டுரை எழுதும் போதும்சுருக்கி எழு தும் போதும் மொழியை ஆளுதல் | ☐ | 7 விடய ஒழுங்கு |

இப்போது நீங்கள் இம்மொடியூலைக் கற்று முடித்துள்ளீர்கள். இதனை எவ்வளவு தூரம் வெற்றி கரமாகக் கற்று முடித்துள்ளீர்கள் என்பதனை நீங்கள் சமர்ப்பிக்கும் ஒப்படை மூலம் அறியப்படும். அவ்வாறான ஒப்படை கீழே தரப்படுகின்றது. இதற்கான விடையை எழுதித் தொலைக்கல்விப் பிரதேச நிலையத்தில் கையளியுங்கள்.

## 13.0 ஒப்படை

(1) i) கட்டுரை வகைகளைப் பற்றி மாணவருக்கு உணர்த்தச் சிறந்த வழிகள் எவை?

(ii) சுயமாகக் கட்டுரை எழுதும் ஆற்றலை மாண ரிடையே வளர்க்கும் உபாயங்கள் எவை?

(iii) கட்டுரை எழுதும்போது வழமையாக மாண வர் விடுகின்ற தவறுகளும் அவற்றைத் தவிர்க்க நீர் மேற்கொள்ளும் பரிகாரங்களும் எவை?

## 14.0 உசாத்துணை நூல்கள்

தமிழ்மொழிப் பயிற்சி – முல்லைமணி

தமிழ் அறிவு – க. பே. முத்தையா

பைந்தமிழ் பயிற்சிகள் – சி. ஆறுமுகம்

புதுமுறைக் கட்டுரைக் கோவை – தமிழ் வளர்ச்சிக்கழகம் காரைநகர்

நாற்பது கட்டுரைகள் – பண்டிதர் சு. வேலுப்பிள்ளை

கட்டுரைப் பூந்துணர் 'சொக்கன்'

தமிழ் 9, தமிழ் 10 } 'கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு

## 15.0 விடைகள்

முற்சோதனை

1 √
2 √
3 √
4 √
5 ×
6 √
7 √
8 √

செவ்வைபார்த்தல் 1

1 – 10
2 – 6
3 – 1
4 – 7
5 – 4
6 – 3
7 – 9
8 – 5

| | | | |
|---|---|---|---|
| செவ்வைபார்த்தல் 2 | 1 | √ | |
| | 2 | × | |
| | 3 | √ | |
| | 4 | √ | |
| | 5 | √ | |
| | 6 | √ | |
| | 7 | √ | |
| | 8 | × | |

| | | | |
|---|---|---|---|
| பிற்சோதனை I | 1 | – | தொடர்புறுத்தல் |
| | 2 | – | ஆக்கத்தன்மை |
| | 3 | – | பந்தி |
| | 4 | – | மதிப்பீடு |
| | 5 | – | அனுபவம் |
| | 6 | – | கருத்து |

| | | | |
|---|---|---|---|
| II | 1 | – | 3 |
| | 2 | – | 7 |
| | 3 | – | 1 |
| | 4 | – | 2 |
| | 5 | – | 4 |

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTD.